Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 67/2018

Deposition of witness for: PW - 12

| | | | |
|---|---|---|---|
| Name | : சிவபாலன் | Father/Husband Name | : அர்சுனன் |
| Age | : | Calling | : |
| Date | : 06.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06 day of 03.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம், அம்மைநாயக்கனுர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.02.2018 ம் தேதி 14.30 மணிக்கு மேலூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது மதுரை மாநகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பணிபுரியும் பெண் தலைமைகாவலர் திருமதி,யசோதா 3249 என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற 84/18, பிரிவுகள் 341, 294(b), 353, 506(1) இதச மற்றும் பெண்கள் துன்புறுத்தலை தடுக்கும் சட்டம் பிரிவு 4 கீழ் வழக்கு பதிவு செய்தேன் ( **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ).

பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், ஒரு நகலை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டும், அன்றைய தினம் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் குமார் மற்றும் கார்மேகம் முன்னிலையில் பார்வை மகஜர், மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். ( **அந்த மாதிரி வரைபடம் முறையே அசாஆ 5 ஆக குறியீடு**

செய்யப்படுகிறது )

அன்றையதினமே சாட்சிகள் யசோதா, வளர்மதி, கார்மேகம், குமார், ஆகியயோர்களை விசாரித்து தனி தனியாக வாக்குமூலம் பதிவு செயதேன். எனது விசாரணையில் சம்பவம் உண்மையென தெரிய வந்ததால் எதிரி பாலா என்ற பாலசுந்தர் என்பவரை 06.02.2018ம் தேதி 20.00 மணிக்கு மேலூர் கலை கல்லூரி அருகே காரணம் கூறி கைது செய்தேன். பின்னர் 08.15 மணிக்கு காவல் நிலையம் பாரா வசம் ஒப்படைத்தேன். அதன்பின்னர் தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

பின்பு 08.02.2018ம் தேதி சாட்சிகள் பாண்டியம்மாள், குணசீலா, சிவராணி, பவித்ரா, பிருந்தா, பிள்ளம்மாள், இந்திரா ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைதினமே எனது புலன்விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 341, 294(b), 353, 506(1) இதச மற்றும் பெண்கள் துண்புறுத்தலை தடுக்கும் சட்டம் பிரிவு 4 கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரி ஆஜர்

எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை

புகார் பெற்ற அன்றைய தினமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் குற்ற இறுதி அறிக்கையை எந்த தேதியில் தயார் செய்தேன் என்றால் 08.02.2018ம் தேதி. இவ்வழக்கானது மாண்புமிகு மதுரை மாவட்ட கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் நீதிமன்றம் பிறபித்த பிடிகட்டளை தொடர்பாக விசாரிக்க சென்றபோது நடந்த சம்பவமாகும், அந்த வழக்கு குறித்து நான் ஏதேனும் விசாரணை செய்தேனா என்றால் இவ்வழக்கிற்கும் அந்த பிடிகட்டளைக்கும் சம்மந்தம் இல்லை என்பதால் விசாரிக்கவில்லை. குற்ற எண் 5/2010ல் எதிரியான பாஸ்கரன் இந்த வழக்கின் எதிரியுடன்

எத்தனை காலம் இருந்து வந்தார் என்று விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் வழக்கிற்கு சம்மந்தம் இல்லை என்பதால் விசாரிக்கவில்லை. அந்த எதிரி பாஸ்கரன் இவ்வழக்கின் எதிரி பள்ளி படித்தபோது இவர்களை விட்டு விட்டு சென்றுவிட்டார், நான் விசாரித்திருந்தால் இது குறித்து தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல. அவ்வாறு பாஸ்கரனை குறித்து விசாரணை செய்திருந்தால் இவ்வழக்கின் புகார்தாரர் பிடிகட்டளையை தொடர்பாக எதிரியை தொந்தரவு செய்திருக்க தேவையில்லை என்ற விவரம் தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல.

2) இவ்வழக்கில் புகார்தாரர் யசோதா சம்பவத்தின்போது இரு சக்கர வாகனத்தில் சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது, அந்த வாகனத்தின் குறித்து குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கின் பார்வை மகஜர், மற்றும் மாதிரி வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல், சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை, காவல் நிலையத்தில் வைத்து எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல, நான் எதிரியிடமிருந்து ஆயுதம் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, குற்ற இறுதி அறிக்கையில் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, எதிரி காவலர்களை அவ மரியாதையாக பேசவில்லை, அவர்களை வழி மறிக்கவும் இல்லை, அவர் மனம் மற்றும் உடல் நோகும் அளவிற்கும் நடந்துகொள்ளவில்லை, கொலைமிரட்டல் ஏதும் தொடுக்கவில்லை என்றால் சரியல்ல.